1973 நவம்பர் 28]

பட்டிருக்கிறது. இது பற்றிய ஆய்வு இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்த பிறகு இந்தத் திட்டத்தைப் பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

பல்லடம் வட்டத்திலுள்ள குளங்களை ஆழப்படுத்துதல்

*463 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சிப் பகுதியான பல்லடம் வட்டத்தில் உள்ள எல்லாப் பாசனக் குளங்களையும் கூடுதல் தண்ணீர் தேங்கும் வகையில் ஆழப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் ஆழப்படுத்துவதன் மூலம் இன்னும் அதிகப் படியான தண்ணீர் தேக்கப்படும். அதே நேரத்தில் இது ஒரு நல்ல பயனுள்ள திட்டம். பல்வேறு கிராமங்களில் உள்ள குட்டைகளில் மழைத் தண்ணீரை தேக்கி வைப்பதற்கு நல்ல பலன் கிடைக்கும். ஆகவே, இந்தத் திட்டத்தை மீண்டும் அமுலாக்குவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கனவே இந்தத் திட்டத்தின்படி குளங்கள் போதுமான ஆழத்தில் இருக்கின்றன என்பதாலும், இவைகளினுடைய நீர் கொள் அளவு தற்பொழுது வருகின்ற நீரை விட அதிகமான கொள் அளவு இருக்கிறது என்ற காரணத்தாலும், மேற்கொண்டு ஆழப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

பொன்னேரி வட்டத்தில் கிடைக்கும் கிளிஞ்சல்கள்

*464 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி வட்டத்தின் கழிமுகப் பகுதிகளில் கிடைக்கும் நல்ல வகைக் கிளிஞ்சல்களைக் கொண்டு புதிய தொழில்கள் துவங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : பழவேற்காடு கழிமுகப் பகுதியில் ஏராளமான அளவுக்கு நல்ல வகையான கிளிஞ்சல்கள் கிடைக்கின்றன. ஆந்திரத்தின் எல்லையில் அந்தக் கிளிஞ்சல்கள் ஏலம் விடப்படுவதால் கடத்தல் போன்றவை நடைபெறுகின்றன. ஆகவே, விரைவில் அரசு முடிவெடுத்து, இந்தக் கிளிஞ்சல்களைப் பயன்படுத்தி சில தொழிற்சாலைகளைத் துவக்குவதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப்பற்றி பரிசீலனை செய்து பார்த்ததில், ஸெல்லுலார் கான்க்ரீட் பிளாண்டுக்கு பயன்படுமா என்று பரிசீலித்ததில் பயன்படாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு அங்கத்தினர் முன்வருவார்களேயானால், உதவி செய்யலாம்.

திரு. சி. ஆறுமுகம் : செங்கற்பட்டு மாவட்டத்தில் மரக்காணம், சூணாம்பேட்டு பகுதியிலே கிளிஞ்சல்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு இவைகளை ஏலம் விட்டார்கள். இப்பொழுது அதை நிறுத்திவிட்டார்கள். சுண்ணாம்புத் தொழிற்சாலையை அரசு பொதுத் துறையிலே ஆரம்பிப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பகுதியைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

New Co-operative Sugar Mills

* 465 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the three proposed sugar mills in the Co-operative sector have commenced producton; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இன்னும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.